## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 91/2018 | Date : 18.04.2023 | PW1 |
|---|---|---|
| Name: பாலு | S/o. கதிர்வேல் | |
| Evidence Recorded Time: 12.41 P.M. to 12.50 P.M. | | |

**1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். மாதம் எவ்வளவு வருமானம் சம்பாதிக்கிறேன் என்றால் மாதம் ரூபாய் நாற்பதாயிரம் சம்பாதிக்கிறேன். மாதம் நாற்பதாயிரம் சம்பாதிப்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். விபத்து என்ன தேதியில் எப்போது நடைபெற்றது என்றால் 16.05.2017–ல் காலை 9 மணி முதல் 9.30 மணிக்குள் இருக்கும். இருசக்கர வாகனத்தை வெங்கடாஜலம் என்பவர் ஓட்டிச் சென்றார். இருசக்கர வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. வெங்கடாஜலம் விபத்து நடந்த இடத்திலேயே இறந்துவிட்டார். விபத்தின் போது சத்யா நகரில் இருந்து காவேரிபுரம் நோக்கி வந்து கொண்டிருந்தோம். பொலிரோ கார் கொளத்துாரில் இருந்து மைசூர் ரோட்டில் வந்து கொண்டிருந்தது. நானும், வெங்கடாஜலபதியும் மது போதையில் அதிவேகமாகவும், ஆஜாக்கரதையாகவும் வந்து பொலிரோ காரின் மீது மோதிவிட்டோம் என்றால் சரியல்ல. வெங்கடாஜலபதியின் இறப்பிற்கு மது போதையில் இருந்ததாக மருத்துவ விபத்து பதிவேட்டில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு யார் மீது போலீசாரால் பதிவு செய்யப்பட்டது என்றால் பொலிரோ கார் உரிமையாளர், ஓட்டுநர், இன்சூரன்ஸ் நிறுவனம் ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. போலீஸ் வழக்கு பதிவு செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்மந்தப்பட்ட விபத்தானது வெங்கடாஜலம் மீதுதான் தவறு என்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் சென்ற இரு சக்கர வாகனம் நேருக்கு நேராக காரின் மையப்பகுதியில்

மோதிக்கொண்டதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி நினைவில்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் காரின் முன் பகுதிதான் சேதம் ஆகியுள்ளதாகத்தான் அறிக்கை வழங்கியுள்ளார் என்றாலும் ஆனால் நான் காரின் பின்பகுதியில் மோதியதாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.